## ABSTRACT

Forests – Kallakurichi District – Sankarapuram Taluk – No.30, Pavunjipattu village - Pavunjipattu Forest Block-II – Survey Number 158/2 – An extent of 2.67.00 hectare – Declaration under section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882) – Notification – Approved – Orders – Issued.

---

**Environment, Climate Change and Forests (FR.13) Department**

**G.O.(Ms) No.73** **Dated:07.05.2024**

**குரோதி, சித்திரை-24**

**திருவள்ளுவர் ஆண்டு-2055**

**Read:**

From the Principal Chief Conservator of Forests (Head of Forest Force), Chennai - 600 032. Letter No.TS2/41676/2021, Dated. 18.02.2022.

=====

**ORDER** :

The proposal received from the Principal Chief Conservator of Forests for notifying of an area of 2.67.00 hectare situated in Survey Number 158/2 in No.30, Pavunjipattu village, Pavunjipattu Forest Block-II, Sankarapuram Taluk, Kallakurichi District under section 4 of the Tamil Nadu Forest Act, 1882, (Tamil Nadu Act V of 1882) is approved and accordingly the appended Notifications will be published in English in the Tamil Nadu Government Gazette, Dated 05.06.2024 and in Tamil in the Kallakurichi District Gazette, Dated 19.06.2024.

2. The Works Manager, Government Central Press, Chennai-1 is requested to ensure that the Notifications are published in the Tamil Nadu Government Gazette, Dated 05.06.2024. On receipt of Notifications, the Branch Manager, Government Branch Press, Virudhachalam is requested to take action to publish them in the Kallakurichi District Gazette.

3. They shall ensure that after publication, printed copies of said notification in English and Tamil are communicated to the officers as shown in the Annexure to this order.

..2.

4. The District Collector, Kallakurichi and the Principal Chief Conservator of Forests are requested to watch the publication of the Notifications and bring to the notice of the Government, delay if any, in publication.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

To
The Works Manager,
Government Central Press,
Chennai – 1.
The Branch Manager,
Government Branch Press, Virudhachalam.
The Additional Chief Secretary/
Commissioner of Land Administration, Chennai – 5.
The Principal Chief Conservator of Forests
(Head of Forest Force), Chennai – 32.
The District Collector, Kallakuruchi.
The Conservator of Forests, Villupuram.
The District Forest Officer, Villupuram.
The Forest Settlement Officer, Kallakurichi.

**Copy to**:-

The Revenue and Disaster Management (L.D.4) Department, Chennai – 9.
The Law (E,CC&F-Sty) Department, Chennai – 9.
The Private Secretary to Additional Chief Secretary to Government,
Environment, Climate Change and Forest Department, Chennai-9.
Stock File/Spare Copy.

**//FORWARDED BY ORDER//**

S. Mohamed Yusuf 7/5/2024.
SECTION OFFICER
07/05/2024

**Annexure to G.O.(Ms)No.73**

**Environment, Climate Change and Forest (FR.13) Department,**

**Dated: 07.05.2024**

| Sl. No. | Designation and Address of the Officers | English | Tamil |
|---|---|---|---|
| 1. | The Additional Chief Secretary to Government, Environment, Climate Change and Forest Department, Chennai – 600 009. | 2 | 2 |
| 2. | The Principal Chief Conservator of Forests (Head of Department), Chennai – 600 032. | 3 | 3 |
| 3. | The District Collector, Kallakuruchi . | 2 | 2 |
| 4. | The Conservator of Forests Villupuram. | 5 | 5 |
| 5. | The District Forest Officer, Villupuram. | 12 | 12 |
| 6. | The Forest Settlement Officer, Kallakuruchi. | 8 | 8 |

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 7/5/2024
Section Officer
07/05/2024

## APPENDIX.

## NOTIFICATION – I.

In exercise of the powers conferred by section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby declares that it is proposed to constitute the land within the boundaries specified in the Schedule below as a reserved forest and appoints the Special Tahsildar (Forest Settlement), Kallakurichi, *ex-officio*, to be the Forest Settlement Officer to exercise the powers under clause (c) of the said section in respect of that land.

## THE SCHEDULE.

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the District | : | Kallakurichi |
| 2. | Name of the Taluk | : | Sankarapuram |
| 3. | Number and Name of the Village | : | 30, Pavunjipattu |
| 4. | Name of the Forest Block | : | Pavunjipattu Forest Block - II |
| 5. | Survey Number of the Forest Block | : | 158/2 |
| 6. | Extent of Forest Block | : | 2.67.00 Hectare |

## BOUNDARIES.

**North**.- The boundary starts from the tri-junction point of Pavunjipattu reserved forest and Survey Numbers 158/2 and 147 of No.30, Pavunjipattu village and generally runs towards northeast along the common boundary of Pavunjipattu Reserved Forest and No.30, Pavunjipattu village at (Survey No.158/2 of No.30, Pavunjipattu village) and reaches the tri-junction point of Pavunjipattu reserved forest and Survey Numbers 158/5 and 158/2 of No.30, Pavunjipattu village.

**East**.- Thence, the boundary generally runs towards south, southeast and south along the western boundary of Survey Numbers 158/5, 158/4A, 158/4B, 158/3A and 158/3B of No.30, Pavunjipattu village and thence the boundary runs towards east along the southern boundary of Survey Numbers 158/3B and 158/3C of No.30, Pavunjipattu village and thence the boundary runs towards south, southwest and south along the northwestern and western boundary of Survey No.157 of No.30, Pavunjipattu village and reaches the tri-junction point of Survey Numbers 157, 149 and 158/2 of No.30, Pavunjipattu village.

**South**.- Thence, the boundary generally runs west, southwest, west, northwest, north and northwest along the northern and northwestern boundary of Survey No.149 and northeastern boundary of Survey Numbers 148 of No.30, Pavunjipattu village and reaches the tri-junction point of Survey Numbers 148, 147 and 158/2 of No.30, Pavunjipattu village.

..6.

**West.-** Thence, the boundary generally runs towards northeast, north, northwest, north, southeast, northeast, north and northwest along the northeastern and eastern boundary of Survey No.147 and southern, southeastern, eastern and northern boundary of Survey Numbers 158/1 and 147 of No.30, Pavunjipattu village and reaches the starting point.

## NOTIFICATION – II.

In exercise of the powers conferred by the last paragraph of section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby appoints the District Forest Officer, Villupuram Division, Villupuram, ex-officio to attend on behalf of the Government at the inquiry prescribed under Chapter-II of the said Act, in respect of the land of Pavunjipattu Forest Block-II proposed to be constituted as reserved forest.

## NOTIFICATION – III.

In exercise of the powers conferred by the section 14 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby appoints the Personal Assistant (General) to the Collector of Kallakurichi District, Kallakurichi ex-officio to hear appeals, if any, against the orders passed under sections 11, 12 and 13 of the said Act, in respect of the land of Pavunjipattu Forest Block-II, proposed to be constituted as reserved forest.

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 7/5/2024.
Section Officer
07/05/2024

**சுருக்கம்**

வனம் - கள்ளக்குறிச்சி மாவட்டம் – சங்கராபுரம் வட்டம் – எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராமம் - பவுஞ்சிப்பட்டு வன வட்டாரம்-II - நில அளவை எண்.158/2-இல் உள்ள 2.67.00 எக்டர் நிலம் - தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 4-ன் கீழ் அறிவிக்கை செய்தல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை**

**அரசாணை (நிலை) எண்.73** | **நாள்: 07.05.2024**

**குரோதி, சித்திரை-24**

**திருவள்ளுவர் ஆண்டு-2055**

**படிக்க:**

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை-32. கடித எண்.டி எஸ்2/41676/2021, நாள். 18.02.2022.

=======

**ஆணை :**

மேலே படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராமம், பவுஞ்சிப்பட்டு வன வட்டாரம்-II, நில அளவை எண்.158/2-இல் உள்ள 2.67.00 எக்டர் நிலத்தினை தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 4-ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 05.06.2024-ல் ஆங்கிலத்திலும், கள்ளக்குறிச்சி மாவட்டம் அரசிதழ் நாள் 19.06.2024-ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 05.06.2024-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அறிவிக்கை

..2.

கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் கள்ளக்குறிச்சி மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் விருதாச்சலம் அரசு கிளை அச்சக மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய மற்றும் கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**<u>பெறுநர்</u>**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 1.
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், விருதாச்சலம்.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்),
சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், கள்ளக்குறிச்சி.
வனப்பாதுகாவலர், விழுப்புரம்.
மாவட்ட வன அலுவலர், விழுப்புரம்.
வன நிர்ணய அலுவலர், கள்ளக்குறிச்சி.

**நகல்:-**
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD-IV) துறை,
சென்னை-9.
சட்டத் (E,CC&F-Sty) துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை-9.
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/5/2024.
பிரிவு அலுவலர்
07/05/2024

**அரசு ஆணை (நிலை) எண்.73**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை,**

**நாள். 07.05.2024-ன் இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை –9. | 2 | 2 |
| 2. | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை-32. | 3 | 3 |
| 3. | மாவட்ட ஆட்சியர், கள்ளக்குறிச்சி. | 2 | 2 |
| 4. | வனப்பாதுகாவலர், விழுப்புரம். | 5 | 5 |
| 5. | மாவட்ட வன அலுவலர், விழுப்புரம். | 12 | 12 |
| 6. | வன நிர்ணய அலுவலர், கள்ளக்குறிச்சி. | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

7/5/2024.
பிரிவு அலுவலர்
07/05/2024

## பிற்சேர்க்கை.

## அறிவிக்கை – I.

1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4-ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே உள்ள விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்களுக்குட்பட்ட நிலப்பரப்பை காப்பு வனமாக அமைக்கக் கருதியிருப்பதாக இதனால் அறிவிக்கிறார். மேலும், அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன பிரிவின் (c) பகுதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயல்படுத்துவதற்கு கள்ளக்குறிச்சி தனி வட்டாட்சியரை அலுவல் முறையில் வன நிர்ணய அலுவலராக இதனால் நியமிக்கிறார்.

## விவர அட்டவணை.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | கள்ளக்குறிச்சி |
| 2. | வட்டத்தின் பெயர் | : | சங்கராபுரம் |
| 3. | கிராமத்தின் எண் மற்றும் பெயர் | : | 30, பவுஞ்சிப்பட்டு |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | பவுஞ்சிப்பட்டு வன வட்டாரம் -II |
| 5. | வன வட்டாரத்தின் நில அளவை எண் | : | 158/2 |
| 6. | வன வட்டாரத்தின் பரப்பளவு | : | 2.67.00 எக்டேர் |

## நாற்புற எல்லைகள்.

**வடக்கு.**- இந்த எல்லையானது பவுஞ்சிப்பட்டு காப்பு வனம் மற்றும் எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண்கள் 158/2 மற்றும் 147 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியில் தொடங்கி பவுஞ்சிப்பட்டு காப்பு வனம் மற்றும் எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராமம் (எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண்.158/2) ஆகியவற்றின் பொது எல்லை நெடுகிலும் பொதுவாக வடகிழக்கு நோக்கிச் சென்று பவுஞ்சிப்பட்டு காப்பு வனம் மற்றும் எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண்கள் 158/5 மற்றும் 158/2 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**<u>கிழக்கு</u>**.- பின்னர் இந்த எல்லையானது எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண்கள் 158/5, 158/4A, 158/4B, 158/3A மற்றும் 158/3B ஆகியவற்றின் மேற்கு எல்லை நெடுகிலும் பொதுவாக தெற்கு, தென்கிழக்கு மற்றும் தெற்கு நோக்கிச் செல்கிறது. பின்னர் இந்த எல்லையானது எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண்கள் 158/3B மற்றும் 158/3C ஆகியவற்றின் தெற்கு எல்லை நெடுகிலும் கிழக்கு நோக்கிச் செல்கிறது. பின்னர் இந்த எல்லையானது எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண்.157-இன்வடமேற்கு மற்றும் மேற்கு எல்லை நெடுகிலும் தெற்கு, தென்மேற்கு மற்றும் தெற்கு நோக்கிச் சென்று எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண்கள் 157, 149 மற்றும் 158/2 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**<u>தெற்கு</u>**.- பின்னர் இந்த எல்லையானது எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண். 149-இன் வடக்கு மற்றும் வடமேற்கு எல்லை மற்றும் நில அளவை எண்.148-இன் வடகிழக்கு எல்லை நெடுகிலும் பொதுவாக மேற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு மற்றும் வடமேற்கு நோக்கிச் சென்று எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண்கள் 148, 147 மற்றும் 158/2 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**<u>மேற்கு</u>**.- பின்னர் இந்த எல்லையானது எண்.30, பவுஞ்சிப்பட்டு கிராம நில அளவை எண். 147-இன் வடகிழக்கு மற்றும் கிழக்கு எல்லைகள் மற்றும் நில அளவை எண்கள் 158/1 மற்றும் 147 ஆகியவற்றின் தெற்கு, தென்கிழக்கு, கிழக்கு மற்றும் வடக்கு எல்லைகள் நெடுகிலும் பொதுவாக வடகிழக்கு, வடக்கு, வடமேற்கு, வடக்கு, தென்கிழக்கு, வடகிழக்கு, வடக்கு மற்றும் வடமேற்கு நோக்கிச் சென்று ஆரம்பப் புள்ளியை அடைகிறது.

**<u>அறிவிக்கை-II.</u>**

1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4-ஆம் பிரிவின் கடைசிப் பத்தியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்கக் கருதியுள்ள பவுஞ்சிப்பட்டு வன வட்டாரம்-II நிலம் தொடர்பாக, மேற்சொன்ன சட்டத்தின் II-ஆம் அத்தியாயத்தின் கீழ்

வரையறுக்கப்பட்டுள்ள விசாரணையில் அரசு சார்பில் கலந்து கொள்ள விழுப்புரம் கோட்டம், விழுப்புரம் மாவட்ட வன அலுவலரை அலுவல் முறையில் இதனால் நியமிக்கிறார்.

**அறிவிக்கை-III.**

1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 14-ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்கக் கருதியுள்ள பவுஞ்சிப்பட்டு வன வட்டாரம் -II பொறுத்த நேர்வில், மேற்சொன்ன சட்டத்தின் 11, 12 மற்றும் 13-ஆம் பிரிவுகளின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கெதிராக மேல்முறையீடுகள் எவையேனும், செய்யப்பட்டால், அவற்றை, விசாரணை செய்ய கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரை (பொது) அலுவல் முறையில் இதனால் நியமிக்கிறார்.

**சுப்ரியா ஸாஹு**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

[signature] 7/5/2024.
பிரிவு அலுவலர்
07/05/2024